திரு. நா. காசிராமன் : சார், இந்த திருப்பூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து விரிவுபடுத்த ஆகும் மதிப்பீட்டுச் செலவைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் திருப்பூருக்கு வந்தபொழுது அங்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்த்த பிறகு அதிகமான டாக்டர்களைப் போட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்களா ? அப்படியிருந்தால் விரைவில் அதை அமல் நடத்த, நடைமுறை ஆண்டிலேயே அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களின் கேள்வி மூலமாகத்தான் இதுபற்றித் தெரிகிறது. அப்படிச் சிபார்சுகள் செய்திருந்தால், தேவை என்று கருதினால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் மருத்துவ மனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 41.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மு.ப. 10-30 **(i) அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் உண்ணாநோன்பு**

MR. SPEAKER : Dr. Hande will kindly read his notice of the adjournment motion and explain how the subject involves more than the ordinary administration of the law under Rule 50 (viii) of the Assembly Rules.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following adjournment motion—

"That the business of this House stand adjourned to discuss a matter of urgent public importance, namely the students of the Annamalai University going on fast in batches in protest against a Professor."

I request you, Sir, to adjourn the business of this House to discuss the course of action to be taken to restore normalcy in the Annamalai University Campus. All that I say is that this particular thing comes under an extraordinary case and some clarification or assurance given by the Leader of the House will help to quieten the situation.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அங்கே இருக்கிற பேராசிரியர் மீது மாணவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அதுபற்றி கிளர்ச்சி நடத்தினார்கள். அதற்குப் பிறகு சட்டப்படியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு "சின்டிகேட்" அவை கூடி அவர்மீது அதுபற்றி விசாரணை நடத்துவது என்றும் முடிவு செய்தார்கள். அதற்குப் பிறகு அவர் ராஜிநாமா செய்யவேண்டுமென்று மாணவர்கள்

கூறினார்கள். ஆனால் அவரை "சஸ்பெண்டு" செய்து விசாரணை செய்யலாம் என்று அதற்கு ஒருவரை "சின்டிகேட்" நியமித்திருக்கிறது. ஆகவே சட்டப்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாணவர்கள் அவர் வேலையை விட்டு நீக்கப்படுகிற காலம் வரையிலும் வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், துணை வேந்தர் அவர்களும் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லுகின்ற அளவுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்கிறார்கள். அந்த ஆசிரியரின் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் துணை வேந்தர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த முயற்சி நேற்றும் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே சட்டத்திற்கு உட்பட்ட முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். எதை எதை செய்ய இயலுமோ அதை எல்லாம் இந்த அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. இன்று காலை கூட நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே பேசி இதற்குத் தக்க முடிவு எடுக்கச் சொல்லியிருக்கிறேன். அந்த ஆசிரியருடைய கருத்தையும் கேட்டு, அவர் ராஜினாமா செய்ய ஆயத்தமாக இருக்கிறார்களா என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே எடுக்கவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிற காரணத்தால இந்த அவையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : In view of the fact that the Hon. Minister has stated that the matter is being dealt with, I hope that Dr. Hande is not pressing the matter.

DR. H. V. HANDE : I am not pressing the matter.

(ii) கோயம்புத்தூரில் தேசியக் கொடியையும், அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியையும் எரித்தது.

MR. SPEAKER : The next adjournment motion is by the Leader of the Opposition. He has given notice of the following adjournment motion :

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely the incident of the burning of the National Flag and part of the Constitution of India in Coimbatore and Madurai on 26th February 1968."

I would request the Leader of the Opposition to explain how this matter involves more than the ordinary administration of the law, because we have got a special law in our State known as the Prevention of Insults to National Honour Act, 1957. According to section 4 of that Act " Whoever wilfully burns or desecrates or insults the Indian National Flag shall be punished with imprisonment of either description for a term which may extend to three years or with fine or with both. " We have got also another section dealing with insult to the Constitution of India. In view of the fact that we have got a special law in our State to deal with the burning of the National Flag or of the Constitution, I would like to know how the subject falls outside the ordinary administration of the law.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கும்படியான இந்த ஒத்திவைப்புப் பிரேரணை சட்டத்தில் இருக்கிற ஒரு காரியம். இருந்தாலும்கூட கொந்தளிப்பான ஒரு நிலையில், அராஜகம் செய்யும்படியான ஒரு நிலையிலே கூட சர்க்கார் போதிய நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியாத ஒரு காரணத்தாலே இதைக் கொண்டு